[24th September 1958

Harijans even with regard to promotions, if the hon. Member thinks that the community should play a part, it is wrong and I think that it should not be encouraged.

MR. SPEAKER : I want to make the position clear. All these days we have been observing the rule that reference to individual grievance should not be made on the floor of this House. So, the hon. Member would be well advised not to persist in such questions. He may ask some other question.

SRI M. JAGANNATHAN : இந்த நெடுஞ்சாலை இலாக்காவிலே ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு, போதிய தகுதியிருந்தும், பதவி உயர்வு கொடுக்காமல் இருந்தது உண்மையா ?

THE HON. SRI P. KAKKAN : உண்மை என்று சொல்ல முடியாது. இருந்தாலும் கனம் அங்கத்தினர் கேட்பதினால் சொல்லுகிறேன். இந்த இலாக்காவிலே ஒரே ஒரு ஹரிஜன் இருந்தார். இதைக் காட்டிலும் அதிகச் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்ததால் அவர் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

*Supply of electricity*

*479 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the number of—

(i) agricultural;

(ii) industrial;

(iii) domestic; and

(iv) street lighting

services that were connected up under the Pykara Electricity System during the second half-year of 1957–58; and

(*b*) the number of villages to which electricity was extended under the same system for that period?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) 2,217 agricultural, 107 industrial, 3,605 domestic, and 16 street lighting services were connected up in the Pykara Electricity System during the second half of 1957–58; and

(*b*) One hundred and seventy-three villages were electrified in the system during the half-year.

SRI M. JAGANNATHAN : இன்னும் அதிகமான அளவுக்கு விளக்கு வசதிக்காகவும் விவசாயத்திற்காகவும் மின்சாரம் தேவைப் படுகிற காரணத்தினால், இன்னும் அநேகம் கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்க சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : அதிகமாக விஸ்தரிப்பு நடந்து கொண்டிருக்கிறது என்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியும். எல்லா அங்கத்தினர்களுக்கும் தெரியும். இன்னும் அதிகப்படுத்தவேண்டும் என்று நாம் ஆசைப்படும்பொழுது, விரும்புகிற அளவுக்கு சாமான்கள் (மெட்டீரியல்ஸ்) கிடைக்கவில்லை. நம்முடைய மாகாணத்தைப் பொறுத்த வரையில் மற்றவர்கள் கண்டு பெருமைப்படக்கூடிய அளவுக்கு விஸ்தரித் திருக்கிறோம்.

24th September 1958]

SRI S. LAZAR : திட்டப்படி எத்தனை கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டிருக்க வேண்டும் ? அது பூர்த்தியாகிவிட்டதா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்தக் குறிப்பிட்ட லிஸ்டத்தைப் பற்றிச் சொல்ல முடியாது. பொதுவாக, போட்டிருக்கும் திட்டங்களுக்கு அதிகமாகவே விஸ்தரிப்பு நடந்துகொண்டு வருகிறது.

SRI J. MATHA GOWDER : மரத்தை நட்டவனுக்கு பழம் கிடைக்காமல் இருப்பது போல, நீலகிரி ஜில்லாவிலே மின்சார உற்பத்தி செய்யும் அந்த ஜில்லாவின் தேவையைப் பூர்த்தி செய்யாமல் இதர ஜில்லாக்களுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே முதலில் நீலகிரி ஜில்லாவுக்குக் கொடுத்துவிட்டு, பிறகு மற்ற ஜில்லாக்களுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்த மின்சார விஸ்தரிப்பைப் பொறுத்தவரையில் நீலகிரி ஜில்லாவிலே பல கோடி ரூபாய் செலவழித்து வருகிறோம். அந்த ஜில்லாவிலுள்ள தேவையையும் மனதில் கொண்டு, கனம் அங்கத்தினருடைய ஆசையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் தான் இன்றைக்கு விஸ்தரிப்பு நடந்துகொண்டு வருகிறது.

*Madurai Municipality*

* 480 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to upgrade the Madurai Municipality into a Corporation? 9–30 a.m.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : No, Sir.

SRI A. A. RASHEED : In view of the importance of Madurai as the capital of Pandya Nad, will the Government reconsider their decision?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : At present we are not treating it as Pandya Nad, and we are not treating Madurai as the caiptal of Pandya Nad. We will give it due consideration.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : மதுரை முனிசிபாலிடியை கார்ப்பரேஷன் ஆக்குவதற்கு என்ன தகுதி இருக்க வேண்டுமோ அந்தத் தகுதி இல்லை என்று சர்க்கார் நினைக்கிறதா ? என் அதைக் கார்ப்பரேஷன் ஆக்குவதற்கு முன் வரவில்லை ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : பொருளாதார நிலை தகுதியில்லை என்றுதான் அரசாங்கம் கருதுகின்றது.

SRI K. VINAYAKAM : Sir, what are the standards or tests which a municipality has got to fulfil before it becomes entitled to conversion into a corporation?

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

SRI V. K. KOTHANDARAMAN : ஒரு கார்பரேஷன் ஏற்படுத்த வேண்டுமென்றால் எவ்வளவு ஜனத்தொகை ? (சிரிப்பு.)

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ஆங்கிலத்தில் கேட்டதை தாங்கள் தமிழில் கேட்கிறீர்கள். (சிரிப்பு.)